விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka ★ ★

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ்: 133

யாழ்ப்பாணம் ஆனி 12 ஜ. ஆகிர் 5 புதன்கிழமை 26-6-74

நவீன கணிதம்
(தபால் மூலம்)

குறைந்த செலவில், சிறந்த முறையில் 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளுக்கும், தேசிய கல்வித்தராதர வகுப்பிற்கும் (NCE), ஆசிரியர்களுக்கும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கும் தபால் மூலம் போதிக்கப்படும்.

மாலையில் நடைபெறும் வகுப்புகள் ... 8 மணிவரை நடைபெறும்

விபரங்களுக்கு:-

மொடேர்ண்
எடியூகேஷன் சென்ரர்,
நெல்லியடி—கரவெட்டி

JAFFNA COLLEGE ... 26 JUN 1974 ... LIBRARY

## வேலைக்காரச் சிறுமிகளின் உதவியுடன் கொள்ளை?

### யாழ்.நகரில் பொலிசாரின் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள வேலைக்காரர் மீது மிகவும் விழிப்பாக இருக்குமாறு யாழ்ப்பாண விசேஷ குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வேலைக்காரச் சிறுமிகளுடன் தொடர்புகொண்டு திட்டமிட்ட கோஷ்டி ஒன்று வீட்டுச் சொந்தக்காரர் இல்லாத சமயங்களில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதே இதற்குக் காரணமாகும்.

அண்மையில் இதுபோன்ற சம்பவம் ஒன்று நல்லூர் கோவில் வீதியில் நடைபெற்றுள்ளது. பிரஸ்தாப வீட்டில் பணி புரியும் லட்சுமி என்ற சிறுமியைச் சிநேகிதமாக்கிக்கொண்ட இனந்தெரியாத ஒருவர், வீட்டுச் சொந்தக்காரர் அங்கு இல்லாத சமயங்களில் அங்கு சென்று உடுபுடைவைகளைக் களவாடிச் சென்றுவிட்டதாகப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது. சுமார் 25 வயது மதிக்கத்தக்க சந்தேகநபரின் பெயர் பண்டா அல்லது குணரத்தினம் என்றும் குறிப்பிட்ட வேலைக்காரச் சிறுமி பொலிசாருக்குக் கூறியுள்ளார். ஒரு வகைத் தூளைத் தருவதாகவும், அதை வீட்டு எஜமானர்களின் உணவில் கலந்து கொடுக்கும்படியும் அந்நபர் வேலைக்காரச் சிறுமியிடம் கூறியிருக்கிறாராம்.

இதுபோலவே கச்சேரி பழைய பூங்கா வீதியில் உள்ள வீடொன்றிலும் வேலைக்காரச்சிறுமியின் உதவியுடன் 29,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது. இக்கொள்ளைக்கும் வேலைக்காரச்சிறுமிக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக பொலிசார் நம்புகின்றனர். சபாபதி என்ற குறிப்பிட்ட வீட்டுக்காரர் பால் குடித்த சில நிமிட நேரத்தில் மயக்கமுற்றுவிட்டதாகவும், தொடர்ந்து நடைபெற்ற எதுவுமே தமக்குத் தெரியாதென்றும் அவர் கூறியிருக்கிறார்.

வேலைக்காரச் சிறுமிகளுடன் சிநேகிதம் கொள்ளும் வாலிபர் கோஷ்டி ஒன்றே திட்டமிட்டு இவ்வித களவுகளில் ஈடுபட்டுவருவதால் மிகவும் ஜாக்கிரதையாக இருக்குமாறு விசேஷ குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. கே. பத்மநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஈ)

## "வளாகமாவது முதலில் வரட்டும் ஒத்துழைக்காவிடினும் இடையூறு வேண்டாம்"

### யாழ். மேயர் துரையப்பா கருத்து

கொழும்பு, செவ்

'யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவிருக்கும் பல்கலைக்கழக வளாகம் பூரணத்துவமான பல்கலைக்கழகம் அல்ல என்பது உண்மையே. ஆனால் இந்த அளவிலாவது முதலில் கிடைக்கும் வளாகத்தைக் கொண்டு பின்னர் அதை விஸ்தரித்துப் பூரணத்துவமுடையதாக்குவோம்.'

—இவ்வாறு யாழ். நகரமேயரும் வடபகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளருமான திரு. அல்பிரட் தங்கராஜா துரையப்பா தெரிவித்தார்.

வடபகுதியில் ஒருபல்கலைக் கழகம் அமைக்கப்படவேண்டுமென்பது நீண்டகாலக் கோரிக்கை. எத்தனையோ கமிஷன்கள் கூட வடபகுதிக்கு ஒருபல்கலைக் கழகம் தேவைதான் என்று சிபார்சுகள் செய்திருக்கின்றன.

ஆனாலும் ஆட்சிபீடத்திற்கு வந்த அரசாங்கங்கள் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு முயற்சி செய்யவில்லை.

பல்கலைக் கழகம் தான் அமைக்காவிட்டாலும் முதற்படியாகப் பல்கலைக் கழகக் கல்லூரிகளையாவது இங்கு அமைக்கலாமென்று கூடச் சிலர் யோசனை கூறியிருந்தனர்.

இப்போது திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலுள்ள ஐக்கிய முன்னணி அரசு பல்கலைக்கழக வளாகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் உடனடியாக அமைக்க முன்வந்திருப்பதை நன்றியுடன் வரவேற்கவேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே சகல வசதிகளையும் கொண்ட பூரணத்துவமான பல்கலைக்கழகத்தை அமைத்துவிட முடியுமென்று எதிர்பார்க்கமுடியாது. அது சாத்தியமுமல்ல. நாட்டின் இன்றைய பொருளாதார நிலையிலும் இந்த வளாகத்தை அமைக்க முன்வந்ததே பாராட்டவேண்டியதாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிபீடத்திலிருந்தபோது தமிழரசுக்கட்சியினரும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரும் அந்த அரசுக்கு ஆதரவளித்தும்கூட ஒரு பல்கலைக்கழகத்தையோ அல்லது ஒரு வளாகத்தைத்தானும் இங்கு அமைக்க முடியாது போய்விட்டதென்பதை மக்கள் மறந்துவிட்டார்கள்.

எனவே இந்தப் பல்கலைக் கழகம் இப்போது அமைக்கப்படவிருக்கும் சமயத்தில் அதற்கு உதவியும் ஊக்கமும் அளிக்கவேண்டும். அப்படிச் செய்யாதவர்கள் அதற்கு இடையூறாக இல்லாமலிருந்தாலே போதும். முதலில் வளாகம் அமையட்டும். பின்னர் அதை விஸ்தரித்து நமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முயற்சி செய்வோம்.

வளாகம் ஒரு கண்துடைப்பு என்றும் வடக்கிலும் கிழக்கிலும் பூரணத்துவமான பல்கலைக்கழகங்களே வேண்டும் என்றும மன்னாரில் நடந்த தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு நிறைவேற்றிய தீர்மானம் குறித்தே திரு. துரையப்பா இவ்வாறு தெரிவித்தார்.

## கடற்றொழில் சங்கங்கள் மூலம் கடனுதவி கிடைக்கும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாவட்டத்திலுள்ள நான்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொள்வனவுத்திட்டத்தின்கீழ் கடற்றொழில் அமைச்சினால் கடன் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, நெடுந்தீவு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கே இக்கடன்கள் வழங்கப்படும்.

இயந்திரப்படகு, வலைகள், கட்டுமரங்கள், வெளியிணைப்பு இயந்திரங்களுக்கு இக்கடன்கள் பயன்படுத்தப்படும். ஊர்காவற்றுறைக் கூட்டுறவுச்சங்கத்திற்கு 3,48,000 ரூபா 12 யந்திரப் படகுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 2,58,000 ரூபா 7 அம்புக் கண்ணாடி வள்ளங்களுக்கும், 30 வெளியிணைப்பு வள்ளங்களுக்கும், 36 மாவள்ளங்களுக்கும், 8 கட்டுமரங்களுக்கும் மற்றும் வலைகளுக்கும் என ஒதுக்கப்பட்டுள்ளது.

எட்டு யந்திரப் படகுகளுக்கும் உபகரணங்களுக்கும் 2,40,000 ரூபாவும் 35 வலைகள் வள்ளங்களுக்கு 1,05,000 ரூபாவும் என மொத்தம் 3,45,000 ரூபா யாழ். நகர கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கத்திற்கு 6 யந்திரப் படகுகளுக்கும் 8 கட்டுமரம், 11 வெளியிணைப்பு மோட்டாருக்குமென 55940 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்புக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 65000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (த-ஈ)

## ராதாகிருஷ்ணன் உடல் நிலையில் அபிவிருத்தி

சென்னை, ஜூன் 25

கடுமையாக மூளை நரம்பு பாதிக்கப்பட்டு தனியார் ஆஸ்பத்திரியொன்றில் சிகிச்சை பெற்றுவரும் பாரத முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனின் உடல்நிலை அபிவிருத்தியடைந்து வருவதாக இன்றுகாலை வைத்திய அறிக்கைகள் தெரிவித்தன.

நேற்று இரவு அமைதியாக அவர் தூங்கினாரென்றும் தொட்டால் உணர்ச்சி ஏற்படுவதாகவும் இருதயம் மற்றும் நாடித் துடிப்புசீராக இயங்குவதாகவும் சிறுநீரகம் ஒழுங்காக வேலை செய்வதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

ஆனாலும் ஆபத்தான கட்டத்தை அவர் இன்னும் தாண்டவில்லையென்றும் மயக்கமான நிலையிலேயே தொடர்ந்தும் இருப்பதாகவும் ... தெரிவித்தனர்.

## "பாரத அணுகுண்டு: இஸ்ரேலுக்கு தொடர்பில்லை"

### இந்தியா மறுப்பு

புதுடில்லி, ஜூன் 25

அண்மையில் பாரதம் மேற்கொண்ட அணுகுண்டுவெடிப்பில் இஸ்ரேலுக்கும் தொடர்பு உண்டு என பாகிஸ்தான் குற்றம் சாட்டுவது ஆதாரமற்றதென்று புதுடில்லியில் அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கோலாலம்பூரில் நடைபெற்றுவரும் இஸ்லாமிய மகாநாட்டின் போது பாகிஸ்தான் தரப்பினர், பாரதத்தின் அணுகுண்டு வெடிப்பு சம்பந்தமாக இஸ்ரேலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று தெரிவித்திருந்தனர்.

இக் கூற்றை மறுத்து புதுடில்லி அதிகாரிகள் பாரத அணுகுண்டுப் பரிட்சை சொந்த முறையில் அமைந்ததொன்றென்றும் சமாதான நோக்குக்காகவே இதைப் பயன்படுத்தப் போவதாகவும் கூறியுள்ளனர்.

தென்னிலங்கை மக்களுக்காக

## கொக்கலையில் மேலும் ஒரு வளாகம்!

கொழும்பு, செவ்.

யாழ்ப்பாணத்தில் வெகு விரைவில் பல்கலைக்கழக வளாகம் ஒன்று அமைக்கப்படவிருப்பதுபோல் தென்னிலங்கை மக்களுக்கென கொக்கலை என்ற இடத்தில் பல்கலைக்கழக வளாகம் ஒன்றை அமைப்பதின் சாத்தியக்கூறுகள் பற்றி அரசு ஆராய்ந்துவருகின்றது.

இத்தகவலை பதில் கல்வி அமைச்சர் திரு. வை. பீ. இடாவல கூறினார்.

[4-ம் பக்கம் பார்க்க]

தேவை

திருநெல்வேலியில் (சந்தையடியில்) 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் ஒருவர் உடன் தேவை. பிணைப்பணம் கட்டக் கூடியவர் மட்டும் 28-6-74 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் 10 மணிக்குமிடையில் நேரில் வரவும். நிர்வாகி, ஈழநாடு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு விளம்பரம்

### தேவை

வெற்று சீமெந்து பாக்குகள் தேவை. வைத்திருப்போர் யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தாருடன் தொடர்பு கொள்ளுங்கள். 303

### விற்பனைக்கு

''யூரியா'', ''அமோனியம் சல்பேற்'' பற்றும் விவசாய ரசாயன மருந்துவகைகள் கட்டுப்பாட்டு விலைக்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். பாம்கோ, 138, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 301

எங்களிடம் எல்லாவிதமான ரக்கறி விதைகள், உரவகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். ரீ. சண்முகநாதன் அன் கோ, 134, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன் No. 71[illegible]1. 230

எங்களிடம் எல்லா அளவுகளைக்கொண்ட பொலித்தீன் ரோல்கள் மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம். ''மூர்த்தலை டிஸ்றிபியூட்டர்ஸ்:- (முஹம்மத் அலி அப்துல் அலி அருகாமையில்), 5, பெரியகடை, யாழ்ப்பாணம், தொலைபேசி: 615 258

### வகுப்புகள்

The Council of Engineering Institutions-Part I. மேற்படி மாலைநேர வகுப்புகள் காங்கேசன்துறையில் ஜூலை 1-ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகவுள்ளன. விபரங்கட்கு: வரப்பிரசாதமருந்துவமனை, ஆலய வீதி, காங்கேசன்துறை. 304

### கல்வி

1975 க. பொ. த. (சா) பரீட்சை மாணவர்களும் எம்மிடம் தபால் மூலம் கல்வி பயிலலாம். பாடம் ஒன்றிற்குச் சம்பளம் மாதம் ரூபா 3/- மட்டுமே. இலவச விபரங்களுக்கு: றெக்ஸ் ரியூட்டறி, யாழ்ப்பாணம். 285

### சேவை

வருமானவரி கணக்குகள் வரைவதற்கு தகுதி பெற்றவர்கள் எம்மிடம் உண்டு. தேவையானோர் எம்மை ஆலோசியுங்கள். கற்பகத்தரு, 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 268

காணிகள் விற்க-வாங்க தேர்ச்சி பெற்ற விலை மதிப்பாளர் மூலம் விலை மதிக்க, உவாந்தா மூலம் நிலம் அளக்க எமது ஸ்தாபனத்தின் புதிய நிர்வாகிகளுடன் தொடர்பு கொள்ளவும். பிராஜ்மல் என்ரப்பிறைசஸ், தையல்முத்து மாளிகை, 213/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 302




**புதன் 26—6—74**

(செய்திகள் காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

காலை 6-00 மங்கள இசை, 6-05 சைவ நற்சிந்தனை—கங்கேஸ்வரி கந்தையா, 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-15 பாமாலை- திருவாசகம், 6-50 திருப்பாசுரம், 7-00 இசைமஞ்சரி, 7-30 நாடுசெழிக்க நாமீட்டும் சாதனைகள் 7-35 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

மாலை 6-20 கத்தோலிக்க கிறுவர் நிகழ்ச்சி, 6-35 முன்னேற்றப் பாதையிலே, 7-00 பாட்டு- இராஜலக்ஷ்மி நந்தகுமார், 7-35 ஜனநின் குரல், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக் கச்சேரி (நாதசுரம்) பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை.

## வெற்றுச்சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 6000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25 மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் யாவும் 8-7-74-ந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் எமக்குக் கிடைக்கும்படியாக அனுப்புதல் வேண்டும்.

**பொது முகாமையாளர்,**
கட்டைவேலி-நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.

நெல்லியடி,
கரவெட்டி,
22-6-74. 129

## இன்று அன்னதான ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், புதன்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதான சபை பதினைந்தாவது ஆண்டு அன்னதான ஆரம்பவிழா இன்று நண்பகல் நடைபெறுகிறது. சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா இதனை ஆரம்பித்து வைத்து அழகாக எழுதப் பெற்றபன்னிரண்டு திருமுறைப்பாக்களையும் அன்னதான மண்டபத்தில் அமைத்துவைப்பார். (அ)

......

### 'கந்தமுருகேசனார் உருவச்சிலை'

நெல்லியடி, செவ்.

தென்புலோலியூர் அறிஞர் கந்தமுருகேசனார் நினைவு தினம் இம்மாதம் 29-ம் திகதி புலோலியில் கொண்டாடப்படும். இத்தினத்தின்போது அறிஞரின் திருவுருவச்சிலை புற்றளைமகாவித்தியாலய முன்றலில் திறந்து வைக்கப்படும்.

# செய்தித் திரட்டு

கொழும்பு, செவ்

இல்மனைற் ஏற்றுமதிமூலம் கணிசமான அளவு செலாவணியை இலங்கை ஈட்டி வருவதாக கனிமமணல் கூட்டுஸ்தாபனத் தலைவர் மகிழ்ச்சி தெரிவித்தார். இதில் 20 லட்சம் ரூபா சம்பாதிக்க முடிந்ததாம்.

### ஆராய்ச்சி

திருமலை, செவ்

திருகோணமலைப் பகுதியின் வரலாற்றுத் தொடரிலுள்ள இருண்ட பகுதிகளை நன்கு அறியும்வகையில் புதைபொருளாராச்சிப் பகுதியினர் தீவிரமான ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர். இதனால் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் பிரபல்யமானதுமான பல தகவல்கள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஏலத்தில்

கொழும்பு, செவ்

இலங்கைக் கடற்படையினர் பாவித்துவந்த 'விஜயா' என்ற கப்பல் பழைய இரும்பு விலைக்கு ஏலத்தில் விற்கப்படும். இக்கப்பல் தனது சேவைக்காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது.

### காதி நீதிமன்றம்

கொழும்பு, செவ்

இலங்கை சோனக வாலிபலீக் இயக்கத்தினர் காதிநீதிமன்றங்கள் செயல்படும் முறையை மாற்றியமைக்கும்படி கோரி அரசாங்கத்துக்கு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கவுள்ளனர். இதனால் முஸ்லிம் மக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### தாக்கினர்

ரம்புக்கனை, செவ்வாய்

ரம்புக்கனைப்பகுதியிலுள்ள கலகெதர பிரதேசத்தில் பஸ் சாரதி ஒருவரையும் கண்டக்டர் ஒருவரையும் சேவை முடிந்து வீடு செல்கையில் வாலிபர் கோஷ்டி ஆயுதங்களால் தாக்கியபின் தலைமறைவாகியுள்ளதாகவும், அதிகாலையில் வீதியில் கிடந்த இவர்களை பொதுமக்கள் ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகவும் தெரிக்கப்பட்டுள்ளது.

### முற்றுப்புள்ளி

அம்பாறை, செவ்வாய்

மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியிருக்கும் அம்பாறை மாவட்ட மீனவர்கள், எண்ணெய் விலையுயர்வினாலும் தட்டுப்பாட்டினாலும் மிகவும் கஷ்டமுறுகின்றனராம். இந்த நிலைமை நீடிக்குமாயின் மீன்பிடித தொழிலுக்கு இப்பகுதி மீனவர்கள் முற்றுப்புள்ளி வைக்கத் தீர்மானித்துள்ளார்கள்.

### விபத்து

கண்டி, செவ்

இந்திய உதவித்தூதுவராத உத்தியோக பூர்வமான கார் நிற்பாட்டப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோதியதால் பலத்த சேதத்துக்குள்ளாகியது தெய்வாதீனமாக உதவித் தூதுவரும் ஏனையோரும் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினர்.

### அதிகபயன்

அம்பாறை, செவ்.

அம்பாறை மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட வாலிபர் குடியேற்றத்திட்டங்கள் எதிர்பார்த்ததைவிட கூடுதலான அளவு பலனளித்துள்ளதாம் விவசாயத்தில் மற்ற மாவட்டங்களைவிடக் கூடுதலான விளைவே இதற்குச் சான்றாகும்.

### பொன்விழா

முருங்கன், செவ்

மடுமாதாவின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா வரும் ஜூலை மாதம் 2-ம் திகதி கொண்டாடப்படும். இம்மாதம் 28-ம் திகதி தொடக்கம் நடைபெற இருக்கும் விசேஷ கொண்டாட்டங்களில் கொழும்பு ஆயரும்பங்குபற்றவுள்ளார்.

......

### கம்பர்மலைக்கு சந்தை தேவை

நெல்லியடி, செவ்

கம்பர்மலை மக்களின் வசதியை முன்னிட்டு அங்கு ஒரு சந்தையை அமைக்கும்படி உடுப்பிட்டி எம். பி. திரு. ஜெயக்கொடி உடுப்பிட்டிக் கிராமசபையைக் கேட்டுள்ளார். (அ)

### ''மகுடி' ஓர்புதுமை''

யாழ்ப்பாணம், புதன்

''தமிழ் இலக்கியவுலகிலே மகுடி புதுமையானது. 'மகுடி' யென்ற இக்கேள்வி - பதில் தொகுப்பு நூல் ஒரு பிரதேச இலக்கியமல்ல. அகில உலக இலக்கியங்களோடு சேர்த்துக் கொள்வதற்குத்தகுதி வாய்ந்தது'' என்று யாழ் செம்மவர்கள் இலங்கிய வட்டம் நாத்திய விமர்சன விழாவில் சித்திரன் வெளியீடான 'மகுடி' கேள்வி-பதில் நூலை விமர்சித்துப்பேசிய எழுத்தாளர் பூநகர் மரியதாஸ் கூறினார். இவ்விழாவினுக்குமேற்படி இலக்கிய வட்டத்தலைவர் டானியல் அன்ரனி தலைமை தாங்கினார்.

தொடர்ந்து கே. டானியலின் 'உலகங்கள் வெல்லப்படுகின்றன' நூலை விமர்சித்து மா. சின்னத்தம்பி பேசியபோது ''டானியலின் ஒரிண்டு கதைகள் வேறுபட்டு நின்றாலும் ஏனையவை தனித்துவமாகத் தோன்றுகின்றன'' எனக்குறிப்பிட்டார்.

மற்றும் மு. வே. யோகேஸ்வரன் தாமரைத்திரு. ஆகியோரும் பேசினர். (அ)

அபிஷேகத் திரவியங்கள்

சந்தனக்குழம்பு

(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக்கட்டைகளால் தயாரிக்கப்பட்டவை)

0 பழனி வாசனை விபூதி
0 அபிஷேக குங்குமம்
0 பஞ்சாமிர்த சாமான்கள்
0 நைவேத்திய சாமான்கள்
0 அஷ்டபந்தன மருந்து
0 அத்திபாரமிடும் பொருட்கள்
0 விவாக முகூர்த்த பொருட்கள்

வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்

0 ''ராதா'' பத்மினி ஐவ்வாது பத்தி
0 99 — 999 ஐவ்வாது பத்தி
0 இந்திராணி பத்தி
0 சக்தி, பூஜா அகர் பத்திகள்
0 மட்டிப்பால் பத்திகள்

விளவு சூடம், சாம்பிராணி
கோவில் தேவைகளுக்கான

சகலவிதமான சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

மற்றும் மருந்துகள், மருந்துச்சரக்குகள்
ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரின்
தயாரிப்புகள் மலிவாகக் கிடைக்கும்

எஸ். சுப்பிரமணியம்

அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்குகள் கோவில் அபிஷேகத்திரவிய வியாபாரம்)

53, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 541, வீடு: 7068 — 160, [illegible], கொழும்பு-11. போன்: 35825

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய பலன்

ஆனி மீ 12-திகதி
(26-6-74)

மேஷம்- அன்புக் கரங்கள் அணைக்கும், அதிர்ஷ்ட தேவதையின் ஆதரவும் கிடைக்கும், தக்கசமயத்தில் தந்தையின் பார்வையும் பதியலாம்.

ரிஷபம்- வியாபாரத்துறையில் விருத்தியுண்டு, செய்தொழில் சிறப்படையும், வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும்.

மிதுனம்- இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும், காதல்களை தாக்கும், கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள், பாலுணர்ச்சி மேலிடும்.

கடகம்- சமீபத்தில் நடைபெற்று முடிந்த சம்பவமொன்று மனதுக்கு வேதனையைத் தரலாம், தொழிலிலும் தொல்லையுண்டு.

சிம்மம்- பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது விரும்பத்தக்கது, அவசர முடிவின்மூலம் விரோதத்தைத் தேடிக்கொள்வீர்கள்.

கன்னி- செய் தொழிலில் தடைகள் உருவாகும், மேலதிகாரிகளின் கழுகுப் பார்வை உங்கள் பக்கம் திரும்பும்.

துலாம்- வாழ்க்கை இன்று வசதி நிறைந்ததாக இருக்கும், அயலவர்கள் உங்களை அன்புடன் உபசரிப்பார்கள்.

விருச்சிகம்- உள்ளத்தில் உவகைக்கூத்து உறவினர்கள் வருகை-வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும்.

தனுசு- கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும், போக்குவரத்து விடயத்தில் அதிகவனம் செலுத்த வேண்டும்.

மகரம்- குடும்ப வாழ்க்கை இன்று சுகமாக இருக்கும், தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார்கள்.

கும்பம்- இறை வழிபாடு மேலிடும், இதயத்தில் அமைதியும் ஏற்படும், பிதாவழி மூலம் நல்ல செய்தியும் கிடைப்பதற்கு இடமுண்டு.

மீனம்- சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம், சுற்றுடலில் நல்ல திருப்பம் ஏற்படும் சுபதினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## சாவகச்சேரி இசைப்போட்டி முடிவுகள்

மீசாலை, செவ்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளை வடமாகாண ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்படும் பேச்சு இசைப் போட்டிகள் சாவகச்சேரி வட்டார ரீதியாக கிளையின் உபதலைவர் திரு. எஸ். கனகசபையின் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்றது.

இசையில் முதல் மூன்று இடங்கள் பெற்றவர்களின் விபரம்:

தனிப்பாடல் கீழ்ப்பிரிவு ஆண்கள்: முதலிடம் கு குமரவேள் (மீசா. வீரசிங்கம் வித்)

கீழ்ப்பிரிவு பெண்கள்: பொ. குணலட்சுமி (சாவ. இந்து), வே. ராதாமணி (மீசா.வீர. வித்), கு. கல்யாணி (சாவ. இந்து)

மேற்பிரிவு பெண்கள்: கு. தவமலர் (மீசா. வீரசிங்கம்), சோ. விக்னேஸ்வரி (மீசா. வீரசிங்கம்), த. பத்மாவதி (மீசா. வீரசிங்கம்)

கூட்டுப்பாடல் கீழ்ப்பிரிவு பெண்கள்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக், மீசாலை வீரசிங்கம் வித்.

மேற்பிரிவு ஆண்கள்: முதலாம் இடம் (வரணி மகாவித்) வேறுபாடசாலைகள் தோற்றவில்லை.

மேற்பிரிவு பெண்கள்: சாவகச்சேரி இந்து, வரணி மகா

## ''வடக்கு ... ஒரு ... தமிழர் ...

மன்னு ...
வடக்கில் நிறுவ ... கப்பட்டிருக்கும் ... கழக வனாகம் ... மற்றத என்றும், ... சின் ஒரு கண்டுபடை ... வடிக்கை என்றும் ... கூட்டணி கூறியுள்ள ... கடந்த ஞாயிறன் ... தில் நடந்த தமிழர் ... ணியின் நடவடிக் ... கூட்டத்தில் இது ... மான தீர்மான ... வேற்றப்ப ... கூட்டணிப் பிரமுக ... எஸ். ஜேசுமார்க் ... லத்தின் முன்னாள் ... டர் திரு. எம். ... தலைமையில் தமிழ ... ணியின் நடவடிக் ... கூட்டம் நடைபெற ... வடக்கில் மட்டும ... லும் வெவ்வேறு ... பூரணத்துவம் ... கல்விக்கழகங்கள் ... வேண்டும் என்று ... கூறுகிறது.

இங்கு நிறைவேற ... தீர்மானத்தின் வி ... மாறு:-

1956-ம் ஆண்டு ... கம் இலங்கை த ... இனத்தின் அபிமா ...

### ஒரு நா ...

போகபுரம், ...
வவனிக்குளம் ... யூனிற்றிலுள்ள ... சையா என்பவர் ... குடித்த மரணமா ... மரண விசாரணை ... வரின் மனைவி சாட் ... தார்.

தான் வரணி ... அம்மன் கோவிலுக் ... அனுஷ்டிப்பதாகவும் ... வுள் தம்பிக்கையப் ... கணவருக்குப் பிடி ... எனவும், இதனால் ...

### குடிக்கக் ... விஷத் ...

போகபுரம், ...
வவனிக்குளம் கு ... திட்டத்திலுள்ள த ... வின் காணியில் ... செய்துவந்த ஒருவர் ... விற்ற பணத்தில் ... வைத் தனக்குத் ... குத் தருமாறு ம ... கேட்டாராம். அவ ... தொகையை மனைவி ... காததால் மனைவி ... யிலேயே நஞ்சைக் ... ராம்.

இத்தகவல் ... யைச் சேர்ந்த சின் ... அருணானந்தம் (3 ... என்பவரின் மரணம் ... மாக நடைபெற்ற ... யில் தெரியவந்தது ... திராவகம் அருந்தி ... ளானந்தம் ஆஸ் ... எடுத்துச் செல்லப் ... னரே மரணமா ... தெரிவிக்கப்பட்டது ... விசாரணை அதிகா ... கொலை மரணம் என ... பளித்தார்.

......

### உற்சவம் ...

சுழிபுரம், ...
வழக்கம்பரை மக ... மன் கோவில் கொ ... உற்சவம் ஆரம்பித் ... பெற்றுவருகிறது. ... மாதம் 3-ம் திகதி ... விழா நடைபெறும் ...

வித், மீசாலை வீரசி ...
இப்போட்டிகளுக்கு ... ஸஸ்தர்களாக சங்கீ ... நிதி கு. வேலாயு ... சங்கீத பூஷணம் சி ... தம்பி, இசைப்பு ... செல்லத்துரை ஆகி ... லமையாற்றினர்.

# வடக்குப் பல்கலைக்கழகம் ஒருகண்துடைப்பு''

## தமிழர் கூட்டணி கண்டனம்

மன்னூர், செவ். ...டக்கில் நிறுவஉத்தேசிக் ...ட்டிருக்கும் பல்கலைக் ...வளாகம் பூரணத்துவ ...து என்றும், இது அர ... ஒரு கண்துடைப்பு நட ...கை என்றும் தமிழர் ...டணி கூறியுள்ளது.

...ந்த ஞாயிறன்று மன்னு ... நடந்த தமிழர் கூட்ட ...ின் நடவடிக்கைக்குழுக் ...டத்தில் இது சம்பந்த ... தீர்மானம் நிறை ...ற்றப்பட்டது ...டணிப் பிரமுகர் திரு. ... ஜேன்மார்க்கின் இல் ...ல் முன்னுள் செனட் ...திரு. எம் மாணிக்கம் ...மையில் தமிழர் கூட்ட ...ின் நடவடிக்கைக்குழுக் ...டம் நடைபெற்றது.

...டஇல் மட்டுமல்ல கிழக்கி ... வெவ்வேறாக இரண்டு ...ணத்துவம் மிக்க பல் ...க்கழகங்கள் நிறுவப்பட ...ண்டும் என்று தீர்மானம் ...றது.

...ங்கு நிறைவேற்றப்பட்ட ...மானத்தின் விபரம் வரு ...:-

...956-ம் ஆண்டு தொடக் ... இலங்கை தமிழ்பேசும் ...த்தின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பூரணத்துவம்பெற்ற பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்று தமிழ்மக்கள் கோரி வந்தார்கள். இக்கோரிக்கை தட்டிக்கழிக்கப்பட்டு வந்துள்ளது.

ஐ. மு. அரசாங்கம் 1970ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் முதல் சிம்மாசனப் பிரசங்கத்திலும் வடக்கிலும் தெற்கிலும் பல்கலைக்கழகங்கள் நிறுவப்படுமெனப் பிரகடனம் செய்துள்ளது.

இன்று வடக்கில் விஞ்ஞான, பொறியியல் கல்விக்குப் போதிய வசதியோ வாய்ப்போ அற்ற, ஓர் அரைகுறை வளாகத்தை நிறுவி, தகுதியிருந்தும் தரப்படுத்துதலினால் இடம்பெறாது தவிக்கும் தமிழ் மாணவர்கள் இங்கும் இடம்பெற முடியாத முறையில் சிங்களப் போதனா மொழியையும் புகுத்தி தமிழ் இனத்தை ஏமாற்றும் அரசின் நடவடிக்கையை கூட்டணி கண்டிக்கிறது. எனவே வடக்கிலும் கிழக்கிலும் பூரணத்துவம் பெற்ற பல்கலைக்கழகங்களை நிறுவுமாறு தமிழர் கூட்டணி அரசைக் கோருகிறது. (ஈ)

# கடலட்டை மூலம் ரூ.82,8796 இலங்கைக்குக் கிடைத்தது

யாழ்ப்பாணம், புதன் சுமார் 1396 தொன் 94 இருத்தல் கடலட்டை ஏற்றுமதி மூலம் வடபகுதிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கம் சுமார் 13,08,411 ரூபா வெளிநாட்டுச் செலாவணியை அரசுக்கு ஈட்டிக் கொடுத்துள்ளன. இவ்வருடம் மே மாதம் வரை ஏற்றுமதிசெய்யப்பட்ட இக்கடல் அட்டை மூலம் சுமார் 82,8,796 ரூபா அந்நியச் செலாவணிச் சான்றிதழ்கள் சம்பாதிக்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறைக் கூட்டுறவுச் சங்கம் சுமார் 4,41,580 ரூபாவையும், பண்டத்தரிப்புக் கூட்டுறவுச் சங்கம் சுமார் 2,99,788 ரூபாவையும், யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கம் 2,41,694 ரூபாவையும் வெளிநாட்டுச் செலாவணியாகச் சம்பாதித்துள்ளன.

மன்னூர், மாந்தை, பருத்தித்துறை, பூநகரிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முறையே சுமார் 1,31,600 ரூபா, 71,841 ரூபா, 6,597 ரூபா, சுமார் 1,15,307 ரூபா வெளிநாட்டுச் செலாவணி சம்பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் வடபகுதிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களால் சுமார் 18,31,682 ரூபாவும் அதற்கு முன்னைய வருடமான 1972ல் சுமார் 13,18,803 ரூபாவும் 1971ல் 8,39,492 ரூபாவும் வெளிநாட்டுச் செலாவணியாகக் கிடைத்துள்ளன.

கடலட்டை ஏற்றுமதி மூலம் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, பூநகரி, மன்னூர், மாந்தை, பண்டத்தரிப்பு, பருத்தித்துறைக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முறையே சுமார் 1,52,902 ரூபா, 2,79,497 ரூபா, 73,321 ரூபா, 83,356 ரூபா, 45,570ரூபா, 1,89,999 ரூபா, 4,147 ரூபா அந்நியச் செலாவணிச் சான்றிதழை இவ்வருடம் மே மாதம் வரை சம்பாதித்துள்ளன.

கடந்த வருடம் 11,60,102 ரூபாவையும், முன்னைய வருடமான 1972ல் 7,24,131 ரூபாவையும், 1971ல் 4,61,061 ரூபாவையும் வடபகுதிக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அந்நியச் செலாவணிச் சான்றிதழாகப் பெற்றுக்கொடுத்துள்ளன. ...... (த-ஈ)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், புதன் அச்சுவேலி லாலா சோப் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் மின்னொளி கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. 4-வது தடவையாக இதை இவர்கள் நடத்துகின்றனர். இதில் பங்குபற்ற விரும்புவோர் இம்மாதம் 30ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

# ஒரு நாஸ்திகரின் பரிதாப முடிவு!

...யோகபுரம், செவ்வாய் ...வனிக்குளம் முதலாம் ...த்திலுள்ள சி. இரா...பா என்பவர் நஞ்சு ...ந்து மரணமானார்.

...ரண விசாரணையில் இறந்த...ன் மனைவி சாட்சியமளித்...

...ன் வரணி சுட்டிபுரம் ...மன் கோவிலுக்கு விரதம் ...ஷ்டிப்பதாகவும் இது கட... நம்பிக்கையற்ற தன் ...வருக்குப் பிடிப்பதில்லை ...வும், இதனால் தன்னுடன் கணவன் தகராறு செய்ததாகவும், பின் மதுவெறியில் நச்சுத்திராவகம் அருந்தியதாகவும் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்வதற்கு முன் உயிர் பிரிந்துவிட்டதாகவும் மனைவி தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனையின் பின்பு தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (அ)

# ...டிக்கக் காசு கொடாததால் விஷத்தைக் குடித்தார்!

...யோகபுரம், செவ்வாய் ...வனிக்குளக் குடியேற்றத் ...த்திலுள்ள தனது காமம் ... காணியில் விவசாயம் ...துவந்த ஒருவர் மிளகாய் ... பணத்தில் ஒரு பகுதி ... தனக்குக் குடிப்பதற் ... தருமாறு மனைவியிடம் ...டாராம். அவர் கேட்ட ...கையை மனைவி கொடுக் ...தால் மனைவி முன்னிலை...யே நஞ்சைக் குடித்தா...

...த்தகவல் யோகபுரத் ... சேர்ந்த சின்னத்தம்பி ...னந்தம் (37 வயது) ...வரின் மரணம் சம்பந்த ... நடைபெற்ற விசாரணை ... தெரியவந்தது. நச்சுத் ...வம் அருந்திய அரு...ந்தம் ஆஸ்பத்திரிக் ...த்துச் செல்லப்படு முன் ... மரணமானதாகத் ...விக்கப்பட்டது. மரண ...ரணை அதிகாரி தற் ...லை மரணம் எனத் தீர்ப் ...த்தார். (அ)

......

## உற்சவம்

சுழிபுரம், செவ்வாய் ...க்கம்பரை மகாமாரியம் ... கோவில் கொடியேற்ற ...வம் ஆரம்பித்து நடை...றுவருகிறது. அடுத்த ...ம் 3-ம் திகதி தேர்த்திரு... நடைபெறும். (அ)

... மீசாலை வீரசிங்கம். ...போட்டிகளுக்கு மத்தி...ர்களாக சங்கீத கலா...கு. வேலாயுதபிள்ளை, ...த பூஷணம் சி. விஜுசித், ..., இசைப்புலவர் சி. ...லத்துரை ஆகியோர் கட...ாற்றினர். (ஈ)

## இரண்டாக்கக் கோரிக்கை

வண்ணார்பண்ணை, செவ். கிழக்குப்பகுதி, அச்சுவேலி பனைநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் 22-வது கிளையில் உறுப்பினர்கள் அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் பங்கீட்டுப் பொருட்களைப் பெறுவதில் மிகவும் கஷ்டம் அடைந்துவருவதாகவும் இக்கிளையை இரண்டாகப்பிரித்து புத்தூர் மத்திய கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்கக் கட்டடத்தில் இருக்கும் ஒரு பகுதியில் ஒரு கிளையை நிறுவுமாறும் புத்தூர் மத்திகிழக்கு கிராமமுன்னேற்றச் சங்கம் மேற்படி சங்க பொது முகாமையாளரையும் கூட்டுறவு உதவிஆணையாளரையும் கேட்டுள்ளது. (அ)

## பொலிசில்

மாவிட்டபுரம் செவ்வாய் மயிலிட்டி கன்னியாஸ்திரிகள் மடத்தில் பல நாட்களாக களவாடி வந்தவர் கன்னியாஸ்திரி ஒருவரிடம் ஒரு நாள் வகையாக மாட்டிக் கொண்டாராம்.

இளவாலை செல்லர் அடைப்பைச் சேர்ந்த ஒருவர் மயிலிட்டி கன்னியாஸ்திரிகள் மடத்தில் வேலைக்கிருந்து அங்குள்ள அலுமாரியில் பல நாட்களாக திருடி வந்தாராம். ஒருநாள் திருடும்போது கன்னியாஸ்திரியான மேரி கென்பச்சன் இவரைக் கண்டுபிடித்து காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைத்தார் என்று இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது (ஈ)

......

## விஞ்ஞானக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், புதன் வல்வை சிதம்பராக் கல்லூரி விஞ்ஞானக் கருத்தரங்கு நாளை மறுதினம் பிற்பகல் 2மணிக்கு நடைபெறவிருக்கிறது. கல்லூரி விஞ்ஞான மன்ற ஆதரவில் நடைபெறும் இக்கருத்தரங்கில் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவா, கவிஞர் இ. முருகையன் முதலியோர் கலந்துகொண்டு உரையாற்றுவர். எல்லாக் கல்லூரி மாணவருக்கும் பயன்படும் இக்கருத்தரங்கு கல்லூரி அதிபர் திரு. சின்னையா சிவநேசன் தலைமையில் நடைபெறும். (அ)

......

## உடையாமூலை வீதி திருத்தப்படும்

வண்ணார்பண்ணை, செவ். மண்டைதீவு விவசாயிகளின் பாவனைக்குரிய வீதியொன்றைத் திருத்தியமைப்பதற்கு மண்டைதீவுக் கிராமசபை நடவடிக்கை எடுத்துள்ளது. மண்டைதீவு 7-ம் வட்டாரத்தில் உடையாமூலை என்ற இடத்திலுள்ள இவ்வீதியின் முதல்கட்ட திருத்த வேலைகளுக்கென கிராமசபை ஐயாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. (அ)


ராணி சினிமா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
கடைசி வாரம்
ஜெய்சங்கர் - ஏ.வி.எம். ராஜன் நடித்த
அன்புச் சகோதரர்கள்
சென்னையில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய சித்திரம்

ஸ்ரீதர் சினிமா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
கடைசி இரண்டுதினங்கள்
சிவாஜி - கே. ஆர். விஜயா நடித்த
திருடன் (புதிய பிரதி)

3-வது சிரிப்பூட்டும் வாரம்
றியோ (யாழ். நகர மண்டபம) தினசரி 4 காட்சிகள்
0 ஜெய்சங்கர் 0 வாணிஸ்ரீ 0 நாகேஷ் நடித்த
அவசரக் கல்யாணம்

ஸ்ரீ கிருஷ்ணா [பண்டத்தரிப்பு]
தினசரி 6-30, இரவு 9-30
ஜெய்சங்கர் - சுந்தரராஜன் நடித்த
நம்மகுழந்தைகள்

REGAL Jaffna
Daily 4-45, 7, 9-30 p.m.
Gregory Peck
in
ARABESQUE

சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர் – சாவித்திரி
ஜக்கம்மா

வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்-சாவித்திரி
வேட்டைக்காரன்

3-வது வாரம்
நாகம்ஸ் [கன்னாகம்]
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப 2-30
எம்.ஜி.ஆர். -ஜெயலலிதா
அன்னமிட்டகை

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30, சனி, ஞாயிறு காலை 10-30
இது ஒரு வழக்கமான கதை அல்ல, முற்றிலும் மாறுபட்ட கதை.
தனக்குரிய மனைவியை, தான் அடையவேண்டிய அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும் ஒரு கோடீஸ்வரனின் கதை
ஆறு குணங்கள் கொண்டவனாம் ஒரு பாவை அது யாரோ எவரோ—அவன்தான்......
ராமன் தேடிய சீதை
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நம்பியார் - அசோகன் - நாகேஷ் - மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

லிடோ [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 4-45, 7-00&9-45
கொபின்(f)போர் ஏ கன்(f)பயிற்றர்
COFFIN FOR A GUN FIGHTER

2-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா - (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
திரையிடப்பட்ட நாள் முதல் ஆயிரக்கணக்கான ரசிகப்பெருமக்களை மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்திவருகிறது - ''பொன்னூஞ்சல்''.
சிவாஜி, உஷாநந்தினி, முத்துராமன், ஏ. சகுந்தலா, சோ, மனோரமா,
'பொன்னூஞ்சல்'
உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.
டைரக்ஷன்: சி. வி. ராஜேந்திரன்
[இலவச பாஸ்களும், சலுகைகளும் ரத்து

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கடைசி 2 தினங்கள் மட்டும்
எம். ஜி. ஆர். சரோஜாதேவி நடித்த
ஆசைமுகம்
28-6-74 வெள்ளி முதல்
ஜெய்சங்கர், ரி. கே. பகவதி, சோ, வி. எஸ். ராகவன்
ஜெயலலிதா (இரு வேடங்களில்), எம். என். ராஜம்
புஷ்பலதா, சி. கே. சரஸ்வதி
நடித்த
வந்தாளே மகராசி
திரைக் கதை, வசனம், டைரக்ஷன்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சத்தியத்தைக் கைவிடுபவன் தன் நாட்டையும் கைவிடக் கூடும்; அவன் மிக நெருங்கிய மிகப் பிரியமான உறவினர்களையும் கைவிடக் கூடும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU

26-6-74

## அபிவிருத்தியும் அக்கிரமங்களும்

கொலை, தற்கொலை, கொள்ளை, பலாத்காரம்- இவ்வித செய்திகளே இன்றைய பத்திரிகைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன. இது சரியா? 'ஈழநாடு' வாசகர்களே இந்தக்கேள்வியை எழுப்பியிருக்கின்றனர்.

அதிகரிக்கும் அக்கிரமங்களைப்பற்றி அதிகாலையில் படிப்பது எல்லோருக்கும் சுவையாயிருக்காது. ஆயினும் வாசகர்களின் கவனத்தைக் கவரும் செய்திகள் இவையென்ற காரணத்துக்காக இவற்றிற்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

குற்றங்களின் புள்ளிவிபரங்கள் எவ்வாறுயினும், இன்று நாட்டில் அக்கிரமங்கள் அதிகரித்து வருவது கண்கூடு. இதற்கு விளக்கம் கொடுப்பதில் கருத்துவேறுபாடுகள் நிலவுவது இயற்கை; இருந்தும்நாட்டில் நிலவும் பஞ்சநிலை காரணமாக களவு, கொள்ளை அதிகரிக்கின்றன என்ற கருத்து சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இது மாபெரும் தவறுஎன்பதை நாம்உணர்வது அவசியமாகும். வறுமையும் பஞ்சமும் பலதரப்பட்டவை. அடுத்த வீட்டவர் மாதம் ஆயிரக்கணக்கில் செலவு செய்பவராயிருந்தால் நான் வறுமைப் பட்டவனென்பது முடிவு. அவருடைய நிலைமையை நான் 'எப்படியும் எட்டிப் பிடிப்பதே' எனது வாழ்க்கையின் நோக்கமாகும். உழைப்பால் உயரமுடியாவிட்டால் களவுமூலமாவது காரியம் கைகூடவேண்டுமென்று திட்டமிடுபவரின் செய்கைக்கு பஞ்சமா காரணம்?

மட்டற்ற செல்வமும் தாங்கொணாத் தரித்திரமும் நாட்டின் வாழ்வில் இணைந்திருக்கும்நிலை தேசிய வாழ்விற்கு அபாயமானது. இந்தத் தீவிரமானநிலையை நீக்குவதே சோஷலிச சித்தாந்தத்தின் முக்கிய அம்சமாகும். சோஷலிசம் உருவாக்க முயலும் சமத்துவநிலையை இலகுவாக அடைய எத்தனிப்பவர்களே இன்றைய கொள்ளைக்காரர்கள் என்று துணிந்து சொல்லலாம்.

பட்டினிச்சாவை எதிர்நோக்கும் ஏழைக்குச் சோறு தான் சிவமாகும். தேசிய அபிவிருத்திக்திட்டம் எதிலும் முதலிடம் பெற வேண்டியன மூன்று காரியங்கள்: உண்ண உணவு, உடுக்க உடை, இருக்கவீடு. அதேசமயம் பட்டினி நிலை நீங்கிவிட்டால் அக்கிரமங்கள் குறையும். நாடு தானாகவே முன்னேறுமென்று முடிவுகட்டிவிட முடியாது. இன்று அதிகரிக்கும் குற்றங்கள் இந்த உண்மையை விளக்கும். ஒரு மனிதனின் சுகவாழ்வு எதில்தங்கியிருக்கின்றது? தன்னிலும் மேலானநிலையில் மற்றவர் இருக்கமுடியுமானால் அவன் வாழ்வில் எவ்வித திருப்தியும் அடையமுடிவதில்லை; எனவே தேசிய அபிவிருத்தித்திட்டங்கள் மண்ணுலகத்தைச் சுவர்க்கமாக்க முடியுமானாலும் மக்கள் வாழ்விற்கு மகிழ்ச்சியளிக்க பொருளாதார உயர்ச்சி மட்டும் போதாது.

எவன் தன் தேவைக்கு மேலான சுகபோகத்தை அனுபவிக்கின்றானோ, அந்த அனுபவத்தில் பெருமை அடைகின்றானோ அவன் நாட்டின் உண்மையான பிரஜையென்று கொள்ளமுடியாது என்றார் மகாத்மாகாந்தி தேவைக்கு மேலதிகமான செல்வம் மனத்திற்கு வேதனை அளிக்கவேண்டிய விஷயம் என்பதே மகாத்மாகாந்தியின் கொள்கையாகும். அடுத்த வீட்டில் அடுப்பு புகைக்காத நிலையில் மகாத்மாவின் மணிவாக்கு வெறும் போதனையென்று தள்ளிவிடமுடியாது.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் நாட்டின் அரசியல், பொருளாதாரபிரச்னைகளை சமாளிக்கக்கூடும். ஆனுல் நமது பண்டைக்கால ஆத்மீக பண்புகள் விஞ்ஞானத்தால் மாறும் இன்றைய சமுதாய சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் தொழிற்படத் தவறினுல் அக்கிரமங்களே பத்திரிகைத் தொழிலுக்கு பலனளிக்கும்.

# காட்டுவழி கதிர்காமம் வி.என்.பி.யின்

# கடைசிக் கட்டுரை



காட்டுவழி கதிர்காமம் சென்ற 'வழிப்போக்கன்' வி. என். பி. தமது சக யாத்திரிகர்களையெல்லாம் முந்திக் கொண்டு கந்தன் கழலடி சேர்ந்துவிட்டார்;

'காட்டுவழி கதிர்காமம்' என்ற தலைப்பில் வி. என். பி. எழுதிவந்த கட்டுரைகளைப் படித்தவர்கள் பலர் கதிர்காமப் பாதயாத்திரையைப் படம் பிடித்துக் காட்டுவது போல் அவை அமைந்திருப்பதாகவும் இப்படிவொரு கட்டுரைத் தொடர் இதுவரை இலங்கையில் எந்தப் பத்திரிகையுமே வெளியிட்டதில்லையென்றும் பாராட்டித் தெரிவித்திருந்தனர்.

இப்படிவொரு அனுபவக் கட்டுரையை வி. என். பி. யினுல்தான் எழுத முடியுமென்பதை 'ஈழநாடு' அறிந்திருந்தது.

ஆனுல் தனக்கென ஒரு தனி வழியை வகுத்திருந்த திரு. வி. என். பி. தான் 'வழிப்போக்கன்' என்பதை நன்றாக உணர்ந்திருந்தார் என்றே சொல்ல வேண்டும்.

நாமெல்லாம் இங்கேயே தங்கிவிட வந்தவர்களென்று கருதிக் கொண்டு என்னென்னவோ பேசுகிறோம்; எதையெதையெல்லாமோ செய்கிறோம். நாமும் வழிப்போக்கர்கள்தாம் என்பதை மறந்துவிடுகிறோம்.

புனைபெயர்கள் வைத்துக் கொள்வதிலும் வி. என். பி. தனிவழி!

கலைநிகழ்ச்சிகளை விமரிசனம் செய்யும்போது 'லாவண்யம்', சமூகத்திலுள்ள குறைகுற்றங்களைச் சாடும்போது 'வழிப்போக்கன்', இப்படி எத்தனையோ சந்தர்ப்பத்துக்கேற்ப பொருத்தமான புனைபெயர்கள்.

'காட்டுவழி கதிர்காமம்' சென்று கொண்டிருக்கையில் கண்டது கேட்டது அனுபவித்தது அத்தனையையும் எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார் வி. என். பி.

முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப்பற்றித் தனியாகக் கட்டுரை எழுதத்திட்டமிட்டிருந்தார்.

'காட்டுவழி கதிர்காமம்' கட்டுரை இனி வி. என். பி. எழுதமாட்டார்.

அவர் எழுதத் திட்டமிட்டிருந்த கட்டுரைகளும் இனி வரமாட்டா.

ஆமாம். அவர் காட்டுவழியை விட்டுத் தனிவழியே கதிர்காமக் கந்தன் கழலினை நாடிச் சென்றுவிட்டார் என்ற செய்தி கடந்த வெள்ளிக்கிழமை கிடைத்தது.

இங்கு பிரசுரமாவது வி. என். பி. எழுதிய கடைசிக் கட்டுரை.

எஸ். எம். ஜி.

## காட்டு வழி கதிர்காமம்

அமரர்
வி. என். பி.

### இலுமெனைற் தொழிற்சாலை

புல்மோட்டையில் வாழும் பெரும்பாலான சோனகர் நெல் விவசாயம் செய்கிறார்கள். சிலர் வியாபாரிகள். போனவருடம் இங்கே மழை குறைவானபடியால் ஏக்கருக்கு நாலுபுசல் அடிக்கவேண்டிய வயல்களில் மூப்பதும் தேறவில்லையென்று ஒரு முஸ்லிம் கமக்காரர் சொன்னார். அவருக்கு இருபதுஏக்கர் நெல்வயலுண்டு. வானம்பார்த்த பூமி. ஒருபோகச்செய்கை. தோட்டம் செய்வதற்குப் போதிய இணறுகளும் வேறு நீர்வசதிகள் இல்லாவிட்டாலும் இணறுள்ள இடங்களில் மிளகாய், வெங்காயம், காய்கறி முதலியன உண்டுபண்ணுகிறார்கள்.

வறண்டு தூர்ந்துபோன ஒருகுளம் வயல்களாக மாறிவிட்டது. நடுவே ஒரு குட்டை-குளத்தின் மிச்சம். அதில்எருமைமந்தைகள் சேருடிக்கொண்டிருந்தன. வெளளைக்கொக்குகள் பேய்ந்து கொண்டிருக்கும் மாடுகளுக்கு எதிரேதின்று பூச்சி பொறுக்கின. ஆள்காட்டி இரண்டு ஓலமிட்டுக் கிளம்பிப் பறந்தன. ஆடு மாடுகளும் வயல்களில் மேய்ந்தன.

பசும்பாலாயினும்சரி எருமைப்பாலாயினும்சரி இங்கே ஒருபோத்தல் ஐம்பதுசதம் தான். பால் சபைக்காரர் வெண்ணெய் எடுப்பதற்காக எருமைப்பாலையே விரும்புகிறார்கள். இதனால் பசுப்பாலுக்கு இங்கே மகிமை குறைவுதான்.

அரிசி மூன்றுமுதல் மூன்றேகால்வரை விற்கிறது. தேநீர் சிற்றுண்டிக் கடைகள் பல இருக்கின்றன. தோசை, அப்பம், பிட்டு ஒவ்வொன்று பதினைந்து சதம், பிளேயின் டீ முப்பது சதம், டீ நாற்பது சதம்.

15-ந் திகதி சனிக்கிழமை புல்மோட்டையிலுள்ள இலுமெனைற் தொழிற்சாலையைப் பார்க்கச் சென்றேன், அங்கு கடமை செய்யும் தமிழ் வாலிபர்கள் என்னை தொழிற்சாலை முழுவதும் சுற்றிக் காண்பித்து ஒவ்வொரு அங்கமாக விளங்கப் படுத்தினுர்கள். (இதுபற்றிய விரிவான கட்டுரையை 'ஈழநாடு' வாரமலரில் பார்க்கலாம்.)

இலுமனைற் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் சைவ இளைஞர்களே, கதிர்காம யாத்திரீகர்களை வரவேற்கும் பொருட்டு. மேற்சொன்ன திருவிழாவை ஏற்பாடு செய்திருந்தார்கள். அடுத்த நாள் அவர்களுடைய உபயமாக காலையில் பயறும் போட்ட பாற்கஞ்சியும், மதியானம் சோறு கறிகளும் அடியார்களுக்கு வழங்கப்பட்டன. திருவிழாவில் நாகஸ்வரக் கச்சேரியைத் தவிர, ஒரு நடன நிகழ்ச்சியும் காத்தவராயன் கூத்து வில்லுப் பாட்டும் விடிய விடிய நடைபெற்றன. கோயிலில் பகலெல்லாம் உள்ளூர் அடியார்கள் கந்த சஷ்டி கவசமும், சிவபுராணமும் தேவார திருவாசகங்களும் முருகன் பாடல்களும் பாடினுர்கள்.

ஒலிபெருக்கியின் அவஸ்தையைச் சகிக்கக் கூடிய தூரத்தில் நான் உட்கார்ந்திருந்தேன். மதுரை சோமசுந்தரத்தின் 'மருதமலை மாமணியே' ஸ்பீக்கரில் வந்தது. எனக்குப் பக்கத்தில் இருந்த ஒரு யாழ்ப்பாணக் கூட்டத்தில் ஒருபெண் கேட்டாள். 'மருதமலை எண்டது [illegible] என்ன? கதிரமலை தான்!' என்று ஒரு பெரியவர் மிகவும் ஆறுதலாகப் பதில் சொன்னார்! அந்த அம்மாள் அதை நம்பவேண்டியது தானே!

மத்தியானம் சாப்பாடு முடிந்ததும் மயில் சாமியும் நானும் புல்மோட்டையிலிருந்து வெளிக்கிட்டு எட்டு மைலுக்கப்பாலுள்ள திரியாய் என்ற கிராமத்துக்கு நடந்தோம். வழியில் யான் ஓயா ஆற்றைப் பாதையில் தாண்டவேண்டும். பாதைக்கு எவரும் பணம்கொடுக்கவில்லை. சனிக்கிழமை இரவை மயில் சாமிக்கு தெரிந்த ஒருவர் வீட்டில் கழித்தோம்.

## முத்தமிழ் விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

கொழும்புத்துறை கோப்பாய், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளைச் சேர்ந்த மாணவர்களால் நடாத்தப்படும் முத்தமிழ் கலைவிழா இன்றும் நாளையும், நாளை மறுதினமும் நல்லூர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பட்டிமன்றம் கவிதையரங்கு, மெல்லிசை, வில்லிசை, நடனம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும். மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்களும் இதில் பங்கு கொள்கின்றனர். தினமும் 2 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இன்றைய நிகழ்ச்சி கொழும்புத்துறை விரிவுரையாளர் திரு. சி. புலேந்திரன் தலைமையில் நிகழும். (ஈ)

……

## நாச்சிமார் கோவிலில் கூரைபிரித்து திருட்டு

யாழ்ப்பாணம், புதன்

நாச்சிமார் கோவில் கூரையை பிரித்து உள்ளே இறங்கிய திருடர் அங்கு காணப்பட்ட உண்டியலை உடைத்து 400 ரூபா ரொக்கத்தைத் திருடிச்சென்றுவிட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான புலன் விசாரணையில் ஈடுபட்ட பொலிசாருக்கு அப்புதலக்கு வதற்கு வசதியாக கோவிலின் உள்ளே சரம் ஒன்று கிடக்கக் காணப்பட்டது. பொலிஸ்நாயின் உதவியுடன் மோப்பம் பிடிக்கப்பட்டபோது, நாய் கொக்குவில் ரயில்நிலையம் வரை சென்று திரும்பியது. சந்தேகநபர் ரயிலில் ஏறி மறைந்துவிட்டதாக பொலிசார் நம்புகின்றனர். (ஈ)

## ஜலஜகுண்டு: இந்தியா மறுப்பு

புதுடில்லி, ஜூன் 25

இந்திய அணுசக்தி இலாகாவினர் ஜலவாயுக் குண்டு ஒன்றை வெடித்துப்பரிசோதிக்க விரும்புவதாகவெளியான செய்தியை இந்திய அணுசக்திகமிஷன் அதிகாரி மறுத்துள்ளார்.

இச்செய்தி முற்றிலும் தவறு சிறிதும் ஆதாரமற்றது என்று அவ்வதிகாரி கூறியுள்ளார்.

## இலங்கை படகு பிடிபட்டது

சென்னை, ஜூன் 25

ராமேஸ்வரம் கடற்கரைக்கு அப்பால் தமிழ்நாடு சுங்கப்பகுதியினர் இலங்கையைச்சேர்ந்த உள்நாட்டுப் படகு ஒன்றைக் கைப்பற்றினுர்கள். இலங்கையிலிருந்து கடத்தல் சாமான்களை இப்படகு ஏற்றிவந்ததாகவும் சுமார் 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கடத்தல் பொருட்கள் இதில் இருந்ததாகவும் அதிகாரிகள் கூறினுர்கள்.

## இஸ்லாமிய அமைச்சர்கள் மறுப்பு

கோலாலம்பூர், ஜூன் 25

கோலாலம்பூரில் நடைபெற்ற இஸ்லாமிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மகாநாட்டில் 18 அரசியல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேற்காஸியா, பிலிப்பைன்ஸிலுள்ள மூஸ்லிம்கள், இந்திய அணுகுண்டு சோதனை போன்ற விஷயங்கள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கொக்கலையில்—

1-ம் பக்கத் தொடர்ச்சி

பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் அமைச்சர் பேசினுர்.

பிரிவெனுக்கள் தொடர்பான சட்டமூலம் மந்திரி சபையின்பரிசீலனையில் இருக்கின்றது. இச் சட்டம் சம்பந்தமாக ஒரு முடிவு எடுப்பதற்குமுன் மகாசங்கத்தினருடன் ஆலோசனை கலக்கப்படும் என்றுர் பதிலமைச்சர். பிரதமமந்திரியின் ஆலோசனையின்பேரில் இப்படி செய்யப்படுவதாக அவர் சொன்னுர்.

பாடசாலைக் கட்டிடங்களுக்காக பெற்றோர்கள் 70 லட்சம் ரூபாய் வரை நன்கொடைகள் வழங்கியுள்ளனர் என்று கூறிய அவர் சோவியத்யூனியனிலிருந்து பாடசாலைகளுக்கான விஞ்ஞான சாதனங்கள் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanadu P. O. Box No. 49, Jaffna. Telegram "Eelanadu" Telephone: [illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org